DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
––––

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.112/2024 | Deposition of Witness for : PW2 |
| Name : ரம்யா | Father/Husband Name : மகேஷ் |
| Age : 51 | Village : கன்னியாகுமரி |
| Taluk : கன்னியாகுமரி | Calling : வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 June 2026.
Accused present.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது கன்னியாகுமரியில் குடியிருந்து கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 என்னுடைய கணவர் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. கடந்த 29.09.2023 ஆம் தேதி மதியம் 1.30 மணியளவில் ராஜேந்திரன் என்பவருக்கு செலவிற்காக நாசேரத் சென்று ATM ல் இருந்து பணம் எடுப்பதற்காக அ.சா.1 க்கு சொந்தமான TN 92 F 9133 என்ற Honda 110 CD மோட்டார் சைக்கிளில் அ.சா.1 ஓட்ட அவருக்கு பின்னால் ராஜேந்திரன் என்பவரும் உட்கார்ந்து கொண்டு சமத்துவபுரத்தில் இருந்து புறப்பட்டு தேரிப்பனை வழியாக கடந்து சென்று வெள்ளமடம் வழியாக நாசேரத் செல்வதற்காக வெள்ளமடம் To நாசரேத் ரோட்டில் வைத்தியலிங்கபுரம் விலக்கு அருகே ரோட்டின் இடதுபுறமாக தெற்கில் இருந்து வடக்காக சவாரி செய்து வரும்போது வைத்தியலிங்கபுரம் To நாசரேத் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த TN 75 0715 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா பொலிரோ பிக்அப் வேனை ஓட்டி வந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டுக் தெரிந்த பிரகாசபுரம் மேலத்தெரு, வேலாயுதன் மகன் ஆனந்தராஜ் என்பவர் அவர் ஓட்டிவந்த வேனை அதிவேகமாகவும், அஜாக்கிரையாகவும், அடிக்காமலும் ஓட்டி வந்து அ.சா.1 ஓட்டி வந்த TN 92 F 9133 என்ற பதிவெண் கொண்ட Honda 110 CD என்ற இருசக்கர வாகனத்தின் மீது இடது பக்கம் இடித்து கீழே தள்ளியதில் அவர்கள் இருவரும் கீழே விழுந்தார்கள் என்றால் அதைக்குறித்து எனக்கு தெரியாது. அதில் அ.சா.1 க்கு இடது, வலது முழங்கையில் இரத்தக் காயமும், வலது கால்


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.02 18:46:39 +0530

உப்புக்குத்தியில் இரத்த காயமும், இடது கால் மூட்டில் சிராய்ப்புக்காயமும், இரண்டு உதடுகளிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ராஜேந்தின் என்பவருக்கு தலையின் முன்பக்கத்தில் பலத்த உள்காயமும், வலது கால் மூட்டில் உள்காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அப்போது அ.சா.1ம் அவர்களுக்கு விபத்து ஏற்படுத்திய பொலிரோ பிக்அப் வேனை ஓட்டிவந்த எதிரியும் சேர்ந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்த ராஜேந்திரனை அந்த பொலிரோ பிக்கப் வேனில் ஏற்றி நாசரேத் லூக்காஸ் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சிகிச்சையில் இருந்த ராஜேந்திரன் சிகிச்சை பலனளிக்காமல் 29.09.2023 ஆம் தேதி மதியம் 2.25 மணிக்கு இறந்துவிட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.02 18:46:45 +0530

Judicial Magistrate, Sathankulam.